1972 ஏப்ரல் 3]

கால்நடைகளை விற்றது என்ற கணக்குகளை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1962-ம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டு 1963-ல் தரப்பட்ட கடன் தொகை ஏறத்தாழ ரூ. 59,700 ஆகும். அது உதவித் தொகையும், கடன் தொகையும். அந்தக் காலத்து ஆட்சி நம்மிடம் இல்லை என்பது உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். 1966-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட கடன் தொகையும் 1967-க்கு பின்னால் தரப்பட்டதல்ல. ஆனால் அப்படித் தரப்பட்ட கடன் தொகைகள் அந்தச் சங்கத்தினால் என்னென்ன காரியங்களுக்காகத் தரப்பட்டனவோ பெரும்பாலும் அதற்காகத் தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு, தீவன கலவைப் பிரிவு அமைக்க ஏற்பட்ட தொடக்கச் செலவு பற்றிய விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இந்தச் சங்க நடவடிக்கைகளில் ஏதாவது குறை இருந்தால் அதைக் குறிப்பாக என் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : அரசாங்கத்திலிருந்து இவ்வளவு பெரிய தொகை கொடுத்தும்கூட நாள் ஒன்றுக்கு ஒரு டன் தீவனம்கூட அங்கு தயாரிப்பது கிடையாது. அங்கு தீவனம் கூடத் தயாரிக்கப்படாமல், அதுகூட இல்லாமல், லாரி எல்லாம் வாங்கி அரசாங்கப் பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். அதையெல்லாம் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து ஆராயப்படும்.

மருத்துவ மனைகள்

*844 **வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் வெளியுறை நோயாளிகள் பிரிவு துவக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

[1972 ஏப்ரல் 3

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிப்பட்ட மாவட்ட மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிகளில் எல்லாம் ஓ.பி. ஆரம்பிக்கப் படுவதில் என்ன சங்கடங்கள் இருக்கின்றன ? ஏன் மீண்டும் புனராலோசனை செய்து அப்படி ஆரம்பிக்க வழிவகை செய்ய இயலாதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தஞ்சையில் இருக்கிற மருத்துவ கல்லூரியைச் சேர்ந்த மருத்துவமனை என்பது தஞ்சை நகரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருக் கிறது. தஞ்சை நகரத்திற்குள் ராஜா மிராசுதார் மருத்துவமனை என்ற ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது. வெளிநோயாளிகள் அனைவரும் ராஜா மிராசுதார் மருத்துவமனையில் கவனிக்கப்படு கிறார்கள். அங்கு சில குறிப்பிடப்பட்ட துறைகளில் இன்னின்ன வகையான நோய்களுடையவர்கள், சிறப்பாக ரெஃப்பரல் அவுட் பேஷியன்ட்ஸ் என்ற முறையில் அனுப்பப்படுகிறவர்கள் கல்லூரி மருத்துவ மனையில் கவனிக்கப்படுகிறார்கள். பொதுவான வெளி நோயாளிகளுக்கு நகரிலுள்ள ராஜா மிராசுதார் மருத்துவமனையே பணியாற்றி வருகிறது.

*845. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவக் கல்வி இயக்குநர், புதிய கட்டடத்திற்கான தேவையை விரிவாக விளக்கியும், தற்போதைய தேவைகளுக்கேற்பத் திருத்திய மதிப்பீட்டுடன் கூடிய வரைவு படத்துடன் அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir is there a proposal to start another Women and Children's Hospital in North Madras to relieve the congestion at Egmore?